Most Rev. Nazarene Soosai Th. D.,D.D.
Bishop of Kottar

Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District, Tamil Nadu, India.
Phone : Off : +91 - 4652-278343, 279152, 279933
: Per : +91 - 4652-278868
Fax : +91 - 4652 - 278570
E-mail : kottardiocese@yahoo.co.in
Website : www.kottardiocese.org

No.C.01/2025 08.01.2025

# மறைசாட்சி புனித தேவசகாயம் திருவிழா
# மறைமாவட்ட திருப்பயண சிறப்பு விழா
# 14.01.2025

**கிறிஸ்து இயேசுவில் அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே!**

"நற்செய்திக்காகப் போராடியவர்கள் பெயர்கள் வாழ்வோரின் நூலில் எழுதப்பட்டுள்ளன. ஆகவே, ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்; மீண்டும் கூறுகிறேன். மகிழுங்கள் கனிந்த உங்கள் உள்ளம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருக்கட்டும்" (பிலி 4:4–5)

திருந்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அழைப்பின்படி,"எதிர்நோக்கின் திருப்பயணிகள்" என்னும் மையச்சிந்தனையில் யூபிலி 2025க்குள் அடியெடுத்து வைத்திருக்கிறோம். தான் வாழ்ந்த காலத்தில் எதிர்நோக்கின் திருப்பயணியாக வாழ்ந்த நமது மண்ணின் மறைசாட்சி புனித தேவசகாயம் கொண்டிருந்த எதிர்நோக்கு ஏமாற்றம் தரவில்லை. அவர் நட்டாலம் ஊரிலிருந்து தொடங்கிய திருப்பயணம் காற்றாடி மலையில் நிறைவு பெற்றது. இந்தத் திருப்பயணம் பாடுகள், வேதனைகள், அழுத்தங்கள், துயரங்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தாலும் இறைப்பற்றின் வழியாக விடுதலையின் விழுமியங்களை வெளிப்படுத்தியது. எதிர்நோக்கக் கூடிய பயணம் வெறும் சமயம் சார்ந்த சடங்குகள் சார்ந்தல்ல; அது வாழ்வுக்கு எதிரான அடிமைக்கூறுகளைத் தகர்த்து, மானுட விடுதலையையும், இயேசுவின் இறையாட்சி சமூகத்தை உருவாக்குவதையும் மையப்படுத்தியது.

## புனிதரின் வாழ்வு சுருக்கம்

1712 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 இல் பிறந்த நம் புனிதர் தன் இளமைக் காலத்தில் திறமை மிக்கவராகத் திகழ்ந்தார். திருவிதாங்கூர் அரசவையில் பணி செய்த அவர், 1741 ஆம் ஆண்டு குளச்சல் போரில் கைதியான டச்சு தளபதி டிலனாயின் நண்பனார். இந்த நட்பு தான் புனிதருக்கு

‘தேவசகாயம்’ என பொருள்படும் ‘இலாசர்’ எனும் பெயரில் திருமுழுக்குப் பெற்று சமூக அவலங்களுக்கு எதிராகச் செயல்பட தொடங்கினார். இதன் விளைவாக 1749 பிப்ரவரி 23–ல் கைதானார். விசாரனைக் கூண்டில் நிறுத்தப்பட்டார். வீண் பழிகள் அவர் மீது சுமத்தப்பட்டன. பலவித கொடூரமான சித்திரவதைக்குள்ளானார். 1751 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் நாள் காற்றாடி மலைக்குக் கொண்டுவரப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். 1752 ஜனவரி 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை சிறையிலிருந்து கிராத்தடியில் விலங்கினைக் கட்டி சுமந்து வருவது போல, புனிதரை சிறைக்காவலர்கள் சுமந்து வந்தனர். காற்றாடி மலையடிவாரத்தில் ஆலமரத்தடியில் புனிதர் இறைவேண்டல் செய்த பிறகு துப்பாக்கி குண்டுகளுக்கு அவரை இரையாக்கினர். விலங்குகளுக்கென தூக்கியெறியப்பட்ட புனிதரின் உடல் காப்பாற்றப்பட்டு கோட்டாறு சவேரியார் பேராலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## நிறைமகிழ்வு தரும் புனிதர்

புனித தேவசகாயம் தன் பாடுகளின் பாதையில் தன்னை சந்திக்க வந்த அனைவருக்காகவும் இறைவனிடம் வேண்டினார். புனிதரின் இறப்பிற்குப் பிறகும் நம்பிக்கையுணர்வோடு அவர் முட்டூன்றி இறைவேண்டல் செய்த இடத்திலும், புனிதர் பாடுகளின் போது புனித வியாகுல அன்னையிடம் பாடுகளை ஒப்புக்கொடுத்தார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிந்தையக் காலக்கட்டத்தில் எழுந்த காற்றாடி மலை புனித வியாகுல அன்னை ஆலயத்திலும் மக்கள் செபித்து பலன் பெற்று செல்கின்றனர். புனிதரின் பரிந்துரையில் நம்பிக்கை கொண்டு செபித்த மக்கள் புதுமைகளையும் வாழ்வில் அனுபவித்து மகிழ்கின்றனர். இத்தகைய வியத்தகு நிலையை எண்ணிப் பார்த்து திருஅவை அவரைப் புனிதர் நிலைக்கு உயர்த்தியது. திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் நாள் மறைசாட்சி தேவசகாயத்தை அருளாளராக அறிவித்து மகிழ்ந்தார். 2022 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் நாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவரைப் புனிதர் நிலைக்கு உயர்த்தினார்.

நமது மண்ணின் மறைசாட்சி, தமிழகத்தின் மறைசாட்சி, இந்தியாவின் முதல் பொதுநிலையினர் மறைசாட்சி என்பதெல்லாம் நமக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. மறைசாட்சி கிறிஸ்துவுக்காக உயிர்துறக்கிற நாள் தான் மறைசாட்சிக்கு விழா நாள். ஆகவே, புனித தேவசகாயம் நினைவு நாளில் அவர் உயிர் துறந்த மலையில் விழா கொண்டாடுவது சிறப்பான உணர்வை நமக்கு வழங்குகிறது. மறைசாட்சி

புனித தேவசகாயம் விழாத் திருப்பலி 14.01.2025, செவ்வாய்கிழமை அன்று மாலை 05.00 மணிக்கு மறைமாவட்ட ஆயர் எனது தலைமையில் நிறைவேற்றப்படுகிறது. யூபிலி 2025 ஆம் ஆண்டை கொண்டாடி மகிழும் நாம், எதிர்நோக்கின் திருப்பயணிகள் என்ற உணர்வோடு காற்றாடி மலைக்கு நம் புனிதரின் மலைக்கு மறைமாவட்டம் முழுவதும் உள்ள மக்கள் புனிதப் பயணம் மேற்கொள்வோம். திருவிழாத் திருப்பலியில் இணைந்து மகிழ்வோம்; இறைவனைப் புகழ்வோம். புனிதர் நம் அனைவருக்காகவும் நமது மறைமாவட்டத்திற்காகவும் சிறப்பாகப் பரிந்து பேசி இறையருள் பெற்றுக் கொடுக்கட்டும்.

கடவுளின் சிறப்புக் கொடையாக நமது மறைமாவட்டம், தமிழகம், இந்தியா பெற்றிருக்கும் இப்புனிதரின் பண்பு நலன்கள் சிறந்தோங்கிட இணைந்து உழைப்போம். இந்திய மண்ணின் முதல் பொதுநிலையினர் மறைசாட்சி என்கிற நிலையில் இந்திய திருஅவையின் பொதுநிலையினர் எழுச்சி பெறும் விதமாக மறைசாட்சி புனித தேவசகாயம் மடிந்த மண்ணை நம்பிக்கையாளர்கள் ஏராளம் வந்து தங்கி, புனிதரது வாழ்வின் விழுமியங்களை தியானித்து செல்லும் உன்னத தலமாக வளர்த்தெடுக்கும் முயற்சிகளில், பங்கேற்போம். மறைசாட்சி புனித தேசகாயத்திற்கென சிறந்ததோர் ஆலயம், விரைவில் அமைக்கவும், புனிதரின் பெயரால் இன்னும் பல அருள் அனுபவங்களை வாழ்வாக்கும் தலங்களை உருவாக்கவும் தகுந்த இடங்களையும், வழிகாட்டுதல்களையும் இறைவன் நம் புனிதர் வழியாகத் தந்துதவிட தொடர்ந்து இறைவேண்டல் செய்வோம்.

அனைவருக்கும் புத்தாண்டின் ஆசிகளையும் தமிழர் திருநாளாம் பொங்கல் பெருநாளின் நல்வாழ்த்துகளையும் இனிதே தெரிவித்துக் கொள்கின்றேன்.

**“ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள் உங்களோடு இருப்பதாக!” (பிலி 4:23)**

கிறிஸ்துவின் மனநிலையில்,

+ S Nazarene

✝ ஆயர் நசரேன் சூசை

கோட்டாறு மறைமாவட்டம்

**குறிப்பு :** இச்சுற்றுமடல் வருகிற 12.01.2025 அன்று ஞாயிறு அறிவிப்பின் போது வாசிக்கப்பட வேண்டும்.